வினாடிக்குள் அவளைத் தாங்கிப் பிடித்த கதிரவன் ஒரேயடியாகப் பயந்து போனான். "சுரபி.. சுரபி.. உனக்கும் ஏதோ உடம்பு சரியில்லையா? மறைக்காதே. கடவுளே.. அம்மா ஒருவர் இழுத்துக் கொண்டு படுத்திருப்பதே போதும். உனக்கும் ஏதாவது என்றால் நான் தாங்க மாட்டேன். சுரபி.. வா.. சாப்பாடு ஒன்றும் வேண்டாம். முதலில் ஒரு டாக்டரிடம் உன்னைக் காட்ட வேண்டும். வா..." என்று துடித்தான் அவன்.

"போகலாம்.. ஆனால்..."

"என்ன ஆனால் கீனால்?" என்று பதட்டப்பட்டான் அவன். "முதலில் கிளம்பு. சீக்கிரம்..."

அவன் பேசாதது போலவே பாவித்து, "கிளம்புமுன் நல்ல கைராசிக்கார லேடி டாக்டர் யாரென்று விசாரித்துத் தெரிந்து அவரிடம்தான் போக வேண்டும்" என்று விழிகளில் குறும்பு மின்ன அவள் சொல்லி முடிக்குமுன் சுரபியின் கன்னங்களில் ரோஜாக்கள் எட்டிப் பார்த்தன.

அவளது பேச்சும் பாவனையும் புரியாமல், "எ...ன்..ன?" என்று இழுத்தவனின் விழிகள் சட்டென வியப்பும் ஆர்வமுமாய் மலர்ந்தன: "என் அமுதசுரபி!" என்று அவளை இறுக அணைத்தவன், உடனே விடுவித்து விலகி நின்றான். "இப்படிக் கட்டிப் பிடித்தால் பாப்பாவுக்கு வலிக்குமோ?"

வெட்கத்தால் முகம் சிவந்த போதும், அடக்கமாட்டாமல் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினாள், சுரபி.

# ஒரு சின்ன ரகசியம்

அந்தப் பயணத்தை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தவள் மஞ்சுளா. அண்ணனின் திருமணத்தின் போதே மேலும் சில நாட்கள் பிறந்த வீட்டில் தங்கி, ஏற்கனவே கூடப்பயின்ற தோழியான அண்ணி ஆனந்தியோடு அளவளாவ மிகவும் ஆசைப்பட்டாள்.

ஆனால் மஞ்சுளாவுடைய நாத்தனார் பிரசவத்திற்கென்று அவளது பிறந்த வீடான, மஞ்சுளாவின் புகுந்த வீட்டுக்கு வந்திருந்தபடியால் அது முடியாது போயிற்று.

இதோ, புகுந்த வீட்டுக் கடமையைச் செவ்வனே செய்து முடித்து , நாத்தனார் குழந்தையோடு அவள் வீடு சென்றதும், 'என்னை விட்டுப் பிரிவதில் அவ்வளவு துடிப்பா?, உதைக்க வேண்டும். உன்னை' என்று பொய்க் கோபம் காட்டிய கணவனைச் சிரித்து சமாளித்து ஒரு வழியாக அண்ணன் வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டாள்.

ரயிலடிக்குப் பிரபாகர் மட்டுமே வந்திருந்ததை அவள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனந்திக்கு வீட்டில் என்னென்ன வேலையோ, முதல் முதலாக வரும் நாத்தனாருக்கு என்று என்னென்ன செய்து வீணாகத் தன்னை வருத்திக் கொண்டிருக்கிறாளோ, என்று எண்ணினாள்.

பிரபாகரும் அதையே சொன்னான். முதல் தடவையாக வரும் நாத்தனாருக்கு ஏற்றபடி விருந்து செய்து கொண்டு இருக்கிறாளாம்.

"இரவில் போய் என்ன விருந்து அண்ணா. முன்னெல்லாம் நாம் சாப்பிடுவோமே, காலை சாப்பாடு ராஜாவுடையது போல, மதியச் சாப்பாடு இளவரசனுடையது போல, இரவுச்

சாப்பாடு 'பாப்ப'னுடையது போல என்று இரவில் வெறும் மோர் சாதமும், பகலில் மீந்தகறி அல்லது ஊறுகாயோடு முழுங்குவோமே!" என்று பழைய கதையை நினைவு கூர்ந்தாள் தங்கை.

"நீ பழைய கறி தந்தாலும் அதிலும் தனியான சுவை இருக்குமே" என்றான் தமையன்.

ஆனந்தி வாயிலில் வந்து வரவேற்றாள் ஆயினும், "வாருங்கள் மஞ்சுளா" என்று வரவேற்றபோது உதட்டில் இருந்த புன்னகை கண்களில் இல்லையோ என்ற சந்தேகம் வந்தது மஞ்சுளாவுக்கு. ஒதுங்கி நின்றாற்போல ஓர் எண்ணம்...

எண்ணம் தோன்றியதுமே தன்னையே கடிந்து கொண்டாள் அவள். ஓடி வந்து கட்டி அணைத்தா வரவேற்பார்கள்? 'டிராமா' போட்ட மாதிரி இராது? நாத்தனார் புத்தி தலை தூக்கிப் பார்ப்பது போலத் தெரிகிறதே

முகம் மலர முறுவலித்து , "இந்த வாங்கள், போங்கள் எல்லாம் வேண்டாம், ஆனந்தி. நாம் இருவரும் ஒன்றாய் படித்தவர்கள்தான்" என்று உரைத்தபடி வீட்டினுள் சென்றாள்.

கைகால்களை கழுவி உணவருந்த அமர்ந்தபோது, கூட உட்கார்ந்து உண்ணச் சம்மதிக்கவில்லை ஆனந்தி. பயணத்தில் அலுத்து வந்திருப்பவள் முதலில் சாப்பிடட்டும் என்று விட்டாள்.

"விடு, மஞ்சு அவளுக்குத் தனியே சாப்பிடுவதுதான் பிடிக்கும். தன் சமையலைத் தானே ரசித்து... வேறு யாராலும் ரசிக்க முடியாதில்லையா?" என்று கேலி பேசியபடி தங்கையின் அருகில் உட்கார்ந்தான் பிரபாகர்.

"ரசிக்க முடியாமல் தான் இப்படி ஓர் இளம் தொந்தி வழிகிறதாக்கும்?" என்று அண்ணனைக் கிண்டல் செய்தபடி, கத்தரிக்காய்க் கறியை ருசித்தாள் தங்கை. "ஆகா! நல்ல ருசி ஆனந்தி. எனக்கு இந்தப் பக்குவம் எழுதித் தருகிறாயா?" என்றபோது அண்ணன் இடையில் புகுந்தான்.

"என்ன பெரிய ருசி, மஞ்சு? இன்னமும் ஒரு ரசம் ருசியாக வைக்க உன் அண்ணிக்கு வரவில்லை. ஒரு தக்காளி



ரசம் செய்வாயே, எல்லாம் ஆனந்திக்குக் கற்றுக் கொடுத்து விடேன். பிறகாவது நன்றாகச் சமைக்கிறாளா என்று பார்க்கலாம்."

விழிகள் பனிக்கிட, அண்ணனின் பக்கம் ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, புன்னகையோடு உண்ணத் தொடங்கினாள் மஞ்சுளா.

அண்ணனிடம் ஏதேதோ கதை பேசியபடி உண்டு கை கழுவச் சென்றவள், திடுமென நினைவு வந்து திரும்பிச் சென்று பார்த்தபோது ஆனந்தி சமையலறையைக் கழுவிவிட்டு முடித்திருந்தாள்.

மறுநாள் காலையில் மஞ்சுளா விழித்து எழுந்து வந்தபோது, பிரபாகரன் அலுவலகம் செல்லத் தயாராகி, காலை உணவை முடித்துக் கொண்டிருந்தான். தங்கையைக் கண்டதும் முறுவலித்து, "நன்றாகத் தூங்கினாயா, பாப்பா. பல் துலக்கி ஆயிற்றல்லவா, எனக்கு அப்புறம் பார்க்கலாம். முதலில் மஞ்சுவுக்குக் காஃபியைக் கொடு ஆனந்தி" என்று மனைவியை ஏவினான்.

காஃபியை ரசித்துக் குடித்துக் கொண்டிருந்தவளிடம், ஏதோ, ஆனந்தியின் காஃபி பரவாயில்லாமல் நன்றாகவே இருக்கும். ஆனால் மற்ற சமையல்... நேற்றே சொன்னேனே. அப்புறம்... இந்தாம்மா, இதில் இந்த மாதச் சம்பளப் பணம் இருக்கிறது. வீட்டு பட்ஜெட் போட அவளுக்குச் சொல்லிக் கொடு. சாமான், துணி மணி எல்லாம் உருப்படியாக வாங்கவும் கற்றுக் கொடுத்துவிடு" என்றான் அண்ணன்.

காஃபி தம்ளரைக் கீழே வைத்து விட்டு, 'அச்கு' என்று பலமாகத் தும்மினாள் மஞ்சுளா. "அப்பப்பா! ரொம்ப ஓவராகத் தான் ஐஸ் வைத்துவிட்டாய் அண்ணா, ஆனால் நீ இவ்வளவு தூரம் போக வேண்டியதில்லை. என்னை உனக்குத் தெரியாதா? பணத்தை ஆனந்தியிடமே கொடுக்கலாம். நான் தப்பாக நினைக்கவே மாட்டேன். இந்த வீட்டு பட்ஜெட் அவளே நன்றாகப் போடுவாள்..."

"கிழித்தாள்" என்றான் அண்ணன். "அவள் பட்ஜெட்டில் இருபது நாளில் சிங்கியடித்தோம். ஒரு மாதம் கையில் கொடுத்ததோடு நிறுத்தி விட்டேன். மீதப் போகும் பணத்தில் வாங்குவதாகச் சொல்லி, ஓர் உருப்படாத சேலை வாங்கி, ஒருதவைப்பில் சேலை நார் நாராய்ப் போய்விட்டது. பணமும் பற்றாக்குறை. அதெல்லாம் இல்லாமல் எப்படி ஒழுங்காகச் செலவு செய்வது என்று.... அய்யோ, நேரம் ஆகிவிட்டது. வரட்டுமா, சின்னக் குட்டி? பை.

அண்ணனுக்கு, வாயில் வரை சென்று, கையாட்டி விடை கொடுத்து விட்டுச் சிரித்த முகத்தோடு அண்ணியைத் தேடிப் போனாள் மஞ்சுளா.

முறம் நிறைய அரிசியை வைத்துக் கொண்டு வெகு கவனத்துடன் கல்பொறுக்கிக் கொண்டிருந்தாள் ஆனந்தி.

"என்ன ஆயிற்று, ஆனந்தி? முதல் பட்ஜெட் பயங்கரத் தோல்வியா? பரவாயில்லை, விடு. தோல்வியே வெற்றியின் அடிப்படை. கை வேலை முடிந்ததும் சொல்லு நாம் இரண்டு பேருமாய் அண்ணன் சம்பளத்திற்கு வேட்டு வைக்கலாம். நானும் கல் பொறுக்கட்டுமா? ஆனந்தி... உன்னை ஆனந்தி என்பதா, அண்ணி என்பதா? ஆனந்தி என்று அழைத்துப் பழகிவிட்டு அண்ணி என்றால் வினோதமாய் இல்லை?"

முறத்தை 'நச்'சென்று கீழே வைத்துவிட்டு உதடு துடிக்க எழுந்தாள் ஆனந்தி.

"ஏன்? என்ன வினோதம்? உனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, நான் உன் அண்ணன் மனைவிதானே? அண்ணி என்பதில் அப்படி விசித்திர வினோதமாய் என்ன இருக்கிறது? எனக்குப் புரியவில்லையம்மா. ஆனால் எப்படிப் புரியும்? நான்தான் மக்கு ஆயிற்றே!" என்று படபடத்து விட்டு அங்கிருந்து போய்விட்டாள்.

ஆனந்தி முறத்தை வைத்த வேகத்தில் சிதறியிருந்த அரிசியைப் பொறுக்கியபடி யோசனையில் ஆழ்ந்தாள் மஞ்சுளா.

நிலை இப்படியே விட்டு விட்டு ஒதுங்கிக் கொள்ள முடியாதே? உயிருக்கு உயிரான அண்ணன், பிறந்த வீடு என்று இருக்கும் ஒரே உறவு...

அரிசியைப் பொறுக்கி வைத்து விட்டு மீண்டும் ஆனந்தியை நாடிச் சென்றாள் மஞ்சுளா.

எங்கோ வெளியை வெறித்தபடி சோகப் பதுமையாக அமர்ந்திருந்த அவளைப் பார்க்கவும் பரிதாபமாகத் தான் இருந்தது.

அருகில் சென்று அமர்ந்து, "அண்ணி, புகுந்த வீட்டில் மாமியார் நாத்தனாருக்கிடையில் இடிபட்டு நசுங்கிப்போய் வந்திருப்பேன் என்று என்னை உத்சாகப் படுத்த நினைக்கிறார் அண்ணன். உச்சிக் குளிர நாலு வார்த்தை சொன்னால் சந்தோஷப்படுவேன் என்ற நினைப்பில் பேசுவதைப் பெரிதாக எடுக்கலாமா? நிஜத்தைச் சொல்லப் போனால் எனக்கு இந்த மாதாந்திர பட்ஜெட் போடுகிற விஷயமே மறந்து விட்டது. அங்கே எங்கள் அத்தை முழு வருடத்துக்கும் புளி, மிளகாய், பருப்பு எல்லாம் ஊரிலிருந்து அறுவடை சமயம் போய்க் கொண்டு வந்து விடுவார்கள். மற்ற சாமான்கூட அவர்கள் சொல்படி தான் வாங்குவோம். எல்லாம் அண்ணன் அறியாததா? சும்மா ஒரு பாவலா. வா, நாம் இருவருமாய் சாமான்களைக் கூட அண்ணன் வருமுன் வாங்கி வந்து வைத்து அவரை அசத்தலாம்."

அன்றையத் தினம் நன்றாகவே கழிந்தது.

அனுபவமின்மையால், ஆனந்திக்குக் கடைக்காரர் பேச்சை வேதவாக்காய் எடுத்துக் கொள்ளும் தன்மை கொஞ்சம் இருப்பதைக் கவனித்து விட்டு வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல மஞ்சுளா தன் மாமியாரைப் பற்றிப் பேசினாள். "எங்கள் அத்தை ரொம்பவும் அனுபவசாலி, அண்ணி. அவர்களை யாராலும் ஏமாற்ற முடியாது. விற்காத மட்டச் சரக்கைத் தள்ளி விடுவதற்காகக் கடைக்காரன் அதைத்தான் நல்லது என்பார் என்று எனக்குச் சொல்லிக் கொடுத்ததே அவர்கள்தான். அதன் பிறகு நான் கடைக்காரர் பேச்சைக்

"சிரித்தாள்" என்றான் அண்ணன். "அவன் பட்ஜெட்டில் இருபது நாளில் சிக்கியடித்தோம். ஒரு மாதம் கையில் கொடுத்ததோடு நிறுத்தி விட்டேன். மீதப் பேசும் பணத்தில் வாங்குவதாகச் சொல்லி, ஓர் உருப்படாத சேலை வாங்கி, ஒருதலைப்பில் சேலை நார் நாராய்ப் போய்விட்டது. பணமும் பற்றாக்குறை. அதெல்லாம் இல்லாமல் எப்படி ஒழுங்காகச் செலவு செய்வது என்று.... அய்யோ, நேரம் ஆகிவிட்டது. வரட்டுமா, சின்னக் குட்டி? பை."

அண்ணனுக்கு, வாயில் வரை சென்று, கையாட்டி விடை கொடுத்து விட்டுச் சிரித்த முகத்தோடு அண்ணியைத் தேடிப் போனாள் மஞ்சுளா.

முறம் நிறைய அரிசியை வைத்துக் கொண்டு வெகு கவனத்துடன் கல்பொறுக்கிக் கொண்டிருந்தாள் ஆனந்தி.

"என்ன ஆயிற்று, ஆனந்தி? முதல் பட்ஜெட் பயங்கரத் தோல்வியா? பரவாயில்லை, விடு. தோல்வியே வெற்றியின் அடிப்படை. கை வேலை முடிந்ததும் சொல்லு நாம் இரண்டு பேருமாய் அண்ணன் சம்பளத்திற்கு வேட்டு வைக்கலாம். நானும் கல் பொறுக்கட்டுமா? ஆனந்தி... உன்னை ஆனந்தி என்பதா, அண்ணி என்பதா? ஆனந்தி என்று அழைத்துப் பழகிவிட்டு அண்ணி என்றால் வினோதமாய் இல்லை?"

முறத்தை 'நச்'சென்று கீழே வைத்துவிட்டு உதடு துடிக்க எழுந்தாள் ஆனந்தி.

"ஏன்? என்ன வினோதம்? உனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ. நான் உன் அண்ணன் மனைவிதானே? அண்ணி என்பதில் அப்படி விசித்திர வினோதமாய் என்ன இருக்கிறது? எனக்குப் புரியவில்லையம்மா. ஆனால் எப்படிப் புரியும்? நான்தான் மக்கு ஆயிற்றே!" என்று படபடத்து விட்டு அங்கிருந்து போய்விட்டாள்.

ஆனந்தி முறத்தை வைத்த வேகத்தில் சிதறியிருந்த அரிசியைப் பொறுக்கியபடி யோசனையில் ஆழ்ந்தாள் மஞ்சுளா.



இதை இப்படியே விட்டு விட்டு ஒதுங்கிக் கொள்ள முடியாதோ? உயிருக்கு உயிரான அண்ணன், பிறந்த வீடு என்று இருக்கும் ஒரே உறவு...

அரிசியைப் பொறுக்கி வைத்து விட்டு மீண்டும் ஆனந்தியை நாடிச் சென்றாள் மஞ்சுளா.

எங்கோ வெளியே வெறித்தபடி சோகப் பதுமையாக அமர்ந்திருந்த அவளைப் பார்க்கவும் பரிதாபமாகத் தான் இருந்தது.

அருகில் சென்று அமர்ந்து, "அண்ணி, புகுந்த வீட்டில் மாமியார் நாத்தனாருக்கிடையில் இடிபட்டு நசுங்கிப்போய் வந்திருப்பேன் என்று என்னை உற்சாகப் படுத்த நினைக்கிறார் அண்ணன். உச்சிக் குளிர நாலு வார்த்தை சொன்னால் சந்தோஷப்படுவேன் என்ற நினைப்பில் பேசுவதைப் பெரிதாக எடுக்கலாமா? நிஜத்தைச் சொல்லப் போனால் எனக்கு இந்த மாதாந்திர பட்ஜெட் போடுகிற விஷயமே மறந்து விட்டது. அங்கே எங்கள் அத்தை முழு வருடத்துக்கும் புளி, மிளகாய், பருப்பு எல்லாம் ஊரிலிருந்து அறுவடை சமயம் போய்க் கொண்டு வந்து விடுவார்கள். மற்ற சாமான்கூட அவர்கள் சொல்படி தான் வாங்குவோம். எல்லாம் அண்ணன் அறியாததா? சும்மா ஒரு பாவலா. வா, நாம் இருவருமாய் சாமான்களைக் கூட அண்ணன் வருமுன் வாங்கி வந்து வைத்து அவரை அசத்தலாம்.

அன்றையத் தினம் நன்றாகவே கழிந்தது..

அனுபவமின்மையால், ஆனந்திக்குக் கடைக்காரர் பேச்சை வேதவாக்காய் எடுத்துக் கொள்ளும் தன்மை கொஞ்சம் இருப்பதைக் கவனித்து விட்டு வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல மஞ்சுளா தன் மாமியாரைப் பற்றிப் பேசினாள். "எங்கள் அத்தை ரொம்பவும் அனுபவசாலி, அண்ணி. அவர்களை யாராலும் ஏமாற்ற முடியாது. விற்காத மட்டச் சரக்கைத் தள்ளி விடுவதற்காகக் கடைக்காரன் அதைத்தான் நல்லது என்பார் என்று எனக்குச் சொல்லிக் கொடுத்ததே அவர்கள்தான். அதன் பிறகு நான் கடைக்காரர் பேச்சைக்

காதில் போட்டுக் கொள்வதே இல்லை. சாமானை ஒருதரத்துக்கு நாலுதரம் சோதித்துப் பார்த்து வாங்குவேன்'' என்று யதார்த்தம் போல அவள் கூற அதன் பின் ஆனந்தி சற்று நிதானத்துடன் செயல்படுவதைக் கண்டு தனக்குத்தானே உள்ளூரத் தட்டிக் கொடுத்துக் கொண்டாள்.

இருவருக்கும் பழைய கதை பேச முடிந்தது.

பேச்சுவாக்கில், மஞ்சுளாவுக்குத் திரட்டுப்பால் பிடிக்கும் என்பது தெரியவர, மறுநாள் இரண்டு லிட்டர் பால் அதிகப்படியாக வேண்டுமென்று பால் டிப்போகாரரிடம் போய்ச் சொல்லி விட்டு வந்தாள் ஆனந்தி.

அவள் சிரித்த முகமாய்ப் பேசப்பேச 'அப்பாடி' என்றிருந்தது மஞ்சுளாவுக்கு.

இரவில் மூன்று பேருமாகச் சீட்டு விளையாடினார்கள். தன்னை உறுத்தாத வகையில் வெளிப்படையாகத் தெரியாத விதமாக ஆனந்திக்கு விட்டுக் கொடுத்துத் தோற்றாள் மஞ்சுளா.

விளையாட்டின் நடுவே பிரபாகரன் சொன்னான், ''இன்றைக்கு அலுவலகத்துக்கு மாப்பிள்ளை ஃபோன் செய்தார் மஞ்சு. அவருடைய அம்மாவுக்குத் தனியாகக் கவனிக்கமுடியவில்லையாம். உன்னை உடனே அனுப்பி வைக்க வேண்டுமாம். அதெல்லாம் முடியாது. இன்னும் பத்துநாள் கழித்துத்தான் அனுப்புவேன் என்று சொல்லிவிட்டேன். நீ வந்து ஒரு வாரம் முடியவில்லை. அதற்குள் அந்தம்மாவுக்கு உடம்பு நொந்து விட்டதாக்கும்!''

'வயதாகி விட்டதல்லவா?' என்று சமாதானம் சொன்ன போதும், போக வேண்டும் என்று மஞ்சுளா கூறவில்லை. கணவன் மாமியாருக்காகச் சொல்லவில்லை என்பதை உணர்ந்ததால் உள்ளூரச் சிரிப்புத்தான் வந்தது.

மறுநாள் சனிக்கிழமை. பிரபாகரனுக்கு அரைநாள் வேலை. ஆனால் மதியம் வர இரண்டு மணிக்கு மேல் ஆகி விடும்.



தனக்காக காத்திராமல் முன்னதாகவே சாப்பிட்டு விடுமாறு அவன் எவ்வளவோ சொல்லியிருந்த போதும், அண்ணனுக்காக காத்திருந்தாள் மஞ்சுளா.

ரொம்பவும் நேரமாகிவிட்டதால் கூடவே உட்காரும்படி மஞ்சுளாவோடு பிரபாகரனும் கூறவே மூவருமாகச் சேர்ந்து சாப்பிட்டனர். ஆனந்தி மறுக்காமல் அமர்ந்ததே மஞ்சுளாவுக்குச் சந்தோஷம்.

ரசத்துக்கு வரும் வரை பிரச்சினை இல்லை.

ஆனால் ரசம் சாதம் ஒருபிடி வாயில் வைத்ததுமே முகத்தைச் சுளித்தான் வீட்டுத்தலைவன்.

''அப்போ! நீ வந்த அன்றே இவளுக்கு ரசம் வைக்கக் கற்றுக் கொடுக்கும்படிச் சொன்னேனே, மஞ்சு. பார், வாயில் வைக்க முடியவில்லை'' என்று வெறுப்புடன் விமரிசிக்கவும் ஆனந்தியின் முகம் வாடிப்போயிற்று.

''அண்ணா...'' என்று குறுக்கிட முயன்றாள் தங்கை.

ஆனால் அதற்குள், ''ஒரு நல்லது கெட்டது சொன்னால் அதை எப்படி ஏற்பது என்பதை முதலில் என் தங்கையிடம் படி!'' மனைவியைக் கடிந்தான் பிரபாகரன்'' எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. உன் திருமணமான புதிதில், அங்கே நான் இருப்பதைச் சற்றும் நினையாமல், 'மீன் குழம்பு என்றால் எங்கம்மா வைப்பதுதான் குழம்பு. அம்மா காலைப் பிடித்துக் கேட்டுச் செய்! என்றாரே மாப்பிள்ளை. அந்தம்மா காலை நீ பிடிப்பதா என்று ரத்தம் கொதித்துப் போயிற்று எனக்கு. ஆனால் நீ....'' தொண்டையைச் செருமிக் கொண்டு, ஏதோ சொல்ல முயன்ற தங்கையைக் கையசைவால் அடக்கி மேலும் தொடர்ந்தான் அவன் ''ராமாயணத்தில் ஓர் இடம் வரும். காட்டுக்குப் போ என்று கைகேயி உத்திரவிட்டபோது, ராமனின் முகம் 'அன்றலர்ந்த தாமரையை ஒத்திருந்ததாக வரும். அதே முகத்துடன் நீ மாப்பிள்ளையைப் பார்த்து முறுவல் செய்தது எனக்கு ஜென்மத்துக்கும் மறக்குமா? இவளைப்பார்! முகத்தை மூன்று மீட்டர் நீளத்துக்கு தூக்கி வைத்திருக்கிறாள்! அதற்கும் கொடுத்து வைக்க வேண்டாமா? எல்லாம் என் தலைவிதி'' எனவும் 'விசுக்'கென எழுந்து விட்டாள் ஆனந்தி.

கண்களில் தீப்பொறி பறக்க, கையை உதறிக் கொண்டு எழ முயன்ற அண்ணனை இடது கையால் பற்றி இருத்தினாள் மஞ்சுளா. தங்கைக்குக் கட்டுப்பட்டு அமர்ந்து, வேண்டா வெறுப்பாய் உணவை முடித்த பிரபாகரன் வரான்டாவில் அமர்ந்து பத்திரிகை படிப்பதுபோலப் பாவனை செய்தான்.

அறைக்குள் புகுந்த ஆனந்தி ஆளையே காணோம். சாப்பிட்ட பாத்திரங்களை எடுத்து ஒதுக்கினாள் மஞ்சுளா. அவளது பிறந்த வீட்டுச் சீராடல் ஆசை எல்லாம் செத்துக் கண்ணாம்பூச்சி விட்டது. இதற்குமேல் ரசாபாசம் ஆகுமுன் இங்கிருந்து நல்லபடியாக எப்படிக் கிளம்புவது என்று யோசிக்கத் தொடங்கினாள் அவள்.

மெல்லத் தமையனிடம் சென்று, "அண்ணா, அவர் ஃபோன் பண்ணினார் என்றாயே, நான் கிளம்பட்டுமா?... அங்கே அத்தை சிரமப்படுகிறார்களோ என்னவோ..." என்று மெல்லிய குரலில் இழுத்தாள்.

தங்கையைக் கூர்ந்து நோக்கியவன் முகத்தில் வருத்தம் பரவியது. "நீ மெய்யாக அதற்காகவா, கிளம்ப நினைக்கிறாய்? எனக்குத் தெரியும்... ஆனால் ஆனந்தி கெட்டவள் இல்லை அவளிடம் பேசுகிறேன்" என்று அவன் எழுந்து செல்லவும் அவள் மேலும் மிரண்டு போனாள். இவன் மேலும் பேசுகிற லட்சணம்தான் தெரிகிறதே ?

"இல்லை அண்ணா... நான்" என்று அவனைப் பின் தொடர்ந்தாள்.

அவன், 'ஆனந்தி' என்று உள்ளே செல்லவும் ஆனந்தி அவசரமாக வெளியே வந்தாள்.

"பாலுக்குச் சொல்லியிருக்கிறது, வாங்கப் போகிறேன்" என்று யார் முகத்தையும் பாராமல் உரைத்து விட்டு மடமடவென்று வீட்டை விட்டு வெளியே நடந்தாள்.

பல்லைக் கடித்துக் கொண்டு மனைவியின் முதுகை வெறித்தான் பிரபாகரன்.



சட்டென இதுவாய்ப்பென்று தோன்றிவிட, "உட்கார் அண்ணா. உன்னிடம் தனியாக ஒன்று பேச வேண்டும்" என்று தொடங்கினாள் மஞ்சுளா.

"அண்ணா, பெண்கள் பிறந்த வீட்டுக்கு என்று வருவது ஏன் தெரியுமா? ஏன் என்னையே எடுத்துக்கொள்ளேன். நான் ஏன் வந்தேன் தெரியுமா? அங்கே சாப்பாடு இல்லாமலா, அல்லது சினிமா நாடகம் என்று அழைத்துப் போவதில்லை என்றா? இல்லை அண்ணா, புகுந்த வீடு என்றால் காலை எழுவதில் இருந்து இரவு வரை கடமைகடமை என்று ஓடி விடுகிறது. இதில் முதுகுவலி என்றோ கைநோவு என்றோ முகம் சுளிக்க முடியுமா? அருகிலேயே இருக்கும் மாமியார் தப்பாக நினைத்து விடக்கூடாதே என்று அது வேறு கவலை.

"இப்போது என்நாத்தனார் குழந்தை பெற்றுப் போனார்கள். தெரியுமில்லையா? பச்சைக் குழந்தை. எத்தனை தடவை துணியை நனைக்கும்? எத்தனை தடவை இரவில் விழித்து விடும்? பெற்றவள் பாடு என்று பச்சை உடம்புக்காரி செய்யட்டும் என்று விட முடியுமா? அல்லது வயதான அத்தை தலையில் கட்டி விட்டு ஒதுங்க முடியுமா? நான்தான் செய்தாக வேண்டும். அதையும் யாருக்கும் மனம் வாடி விடக் கூடாதே என்று புன்னகையோடு செய்ய வேண்டும். கடமைதான். ஆனால் கடமை என்பதால் வேலை உடம்பில் பிடிக்காமல் போகுமா?

"இந்தக் களைப்பு, சோர்வு, மலைப்புகளை உள்ளடக்கி அடக்கி, உடம்பிலும் உள்ளத்திலும் ஏறிவிட்ட இறுக்கம் தளர்ந்து அப்பாடி என்று ஃப்ரீயாக விழுந்து கிடக்கத் தான் பிறந்த வீடு தேடுவது. இங்கேயும் அந்தச் சுகம் கிடைக்கவில்லையென்றால்...."

"என்ன செய்வது, சின்னக்குட்டி?" என்று பெருமூச்சு விட்டான் பிரபாகரன். "நான் என்னென்னவோ நினைத்தேன்..."

அண்ணனை ஒரு பார்வை பார்த்துவிட்டு மேலே தொடர்ந்தாள் மஞ்சுளா. "அண்ணா, ஒரு பெண்ணின் திரும

ணம் என்பது வேரோடிய மரத்தைப் பிடுங்கி இன்னோர் இடத்தில் நட்டுவைரச் செய்வது போலத்தான். வாடாமல், வதங்காமல் அது வளருவது பெரிய காரியம். என் வீடு போலப் பிரியமான உறவினர்கள் கிடைக்கும் இடத்திலேயே பலசமயங்களில் மூச்சு முட்டித்தான் போகிறது. அதுவே அன்பற்ற சூழ்நிலையானால் வாழ்வே வெறுத்து விடாதா?''

சற்றுத் திகைப்புடன் தங்கையை நோக்கினான் அண்ணன், ''மஞ்சு... நீ என்னையா, என்னையாம்மா குறை சொல்கிறாய்? ஆனந்திமிடம் எனக்கு எவ்வளவு பிரியம்.... அவள் என் உயிர் தெரியுமா?''

''தெரியாது'' என்றாள் மஞ்சுளா வெடுக்கென. ''எனக்கு மட்டுமல்ல.... ஆனந்திக்கும் அது தெரியாதுதான். ஏனென்றால் நீ அந்த அழகில் உன் அன்பைக் காட்டிக் கொள்கிறாய்'' என்றாள் கடுமையாகவே. ''அண்ணா, சமையலில் உன் பாராட்டைப் பெற்று விட வேண்டும் என்று ஆனந்தி அம்மிக் கல்லில் மசாலா அரைக்கிறாள் தெரியுமா?''

''கையலிக்காது? ஏன்? மிக்சி சிப்பேரா? என்னிடம் சொல்லியிருந்தால்...

''சிப்பேரும் இல்லை, மண்ணாங்கட்டியும் இல்லை. அம்மியில் அரைத்து சமைத்தால் நன்றாக இருக்கும் என்று யாரோ சொன்னார்களாம். நீயானால் ரசம்கூட வைக்கத் தெரியவில்லை என்று வக்கனை பேசுகிறாய். ஏன் அண்ணா, ஏதோ ஒன்றிரண்டு சுவை குறைவாக இருந்தால்தான் என்ன? நீ அதைச் சொல்லிக் காட்டிக் குட்டித்தான் ஆக வேண்டுமா? அவள் சாப்பிடும் போது அவளே கண்டு திருத்திக் கொள்ள மாட்டாளா? அவள் இந்த வீட்டுக்கு வந்தது உனக்கு மனைவியாகவா, அல்லது சமையல்காரியாகவா?''

முகம் வாடிப்போனான் பிரபாகரன். ''இல்லை குட்டிம்மா. உன் சமையல் மாதிரி....

தலையசைத்து, ''எனக்குச் சமையல் என்று என்ன அண்ணா, பெரிசாத் தெரியும்? ப்ளஸ் டூ முடித்து அடுப்படியைச் சற்று ஆர்வத்தோடு பார்க்கூடிய வயதில்தான், அதைக்



கற்றுக் கொடுக்கக் கூடிய அம்மா ஆண்டவனிடம் சென்று விட்டார்களே. நானாக ஏதோ புத்தகத்தில் படித்து, கொஞ்சம் யோசித்து எப்படியோ செய்வேன். பாதிநாள் ருசி எங்கேயோ இடிக்கும். அதை மழுங்கடிக்க நெய்யை ஊற்றிவிடுவேன். உனக்கு அப்போது நான் சமைத்தேன் என்பதே பெரிதாக இருந்தது. இந்த நெய்யும் சேர்ந்துவிட அது ஏதோ ஸ்பெஷல் என்று எண்ணி விட்டாய். நீ சொன்னாயே பெரிசாய் 'ரசம்' என்று அதைக் கூட நெய்யில் தாளிப்பேன். அவ்வளவுதான். அப்புறம் இந்த அதிகப்படிக் கொழுப்பைச் சமன் செய்ய பச்சடி, சொதி என்று வைத்து சமாளிப்பேன். இப்போது ஏதோ அத்தை கசடு இல்லாமல் கற்றுக் கொடுத்ததால் பரவாயில்லாமல் சமைக்கிறேன். நீயானால் ஆனந்தியின் அருமையான சமையலோடு என் தில்லுமுல்லு வேலையை ஒப்பிட்டு உயர்வு என்றும் பேத்துகிறாய்! சரியான 'புத்து' அண்ணா நீ'' என்றாள் தங்கை கோபமும் பரிதாபமுமாக.

''என் அண்ணனின் அன்பு எனக்கு எப்போதும் இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அண்ணா, ஆனால் அந்த அன்பை நீ அண்ணிக்கு மறைத்தோ அவளை ஒதுக்கியோ தருவது என்றால் எனக்குப் பிரியமில்லை. தன் பெற்றோர் உற்றோரை விட்டுப் பிரிந்து, உன் வாழ்வில் பங்கேற்க வந்திருக்கும் அண்ணிக்கு அது நியாயம் செய்வதும் ஆகாது.''

''அதற்காக? ஒரு வார்த்தை சொன்னால் நல்லபடியாக ஏற்கிறாளா? நான் ஏதோ ஏதோ நினைத்தால்... எல்லாம் தலைவிதி'' என்று வேதனைப்பட்டான் பிரபாகரன்.

''தலைவிதியாவது ஒன்றாவது? எல்லாம் உன் மடத்தனம்!''

அண்ணன் அதிர்ந்து நோக்கவும் முறுவலித்து ''ரொம்பக் கடுமையாகப் பேசி விட்டேனோ? சாரி, அண்ணா உனக்கு ஒரு ரகசியம் சொல்லட்டுமா? அண்ணா, வெளியே சொல்லக் கூடாத முதலிரவு ரகசியம்! எங்கள் திருமணமான முதல்நாள் இரவு உன் மாப்பிள்ளை என்ன சொன்னார் தெரியுமா?

மஞ்சு, உன்மேல் எனக்கு அளவிட முடியாத அன்பு, ஆசை, பிரியம். ஆனால் இதற்காக நான் வீட்டில் எதையும் மாற்ற முடியாது. இன்றுவரை சம்பளத்தை என் அம்மாவிடம் தான் கொடுத்து வருகிறேன். பூ, பலகாரம், பழம், துணிமணி என்று யாருக்கு என்ன வாங்கி வந்தாலும் அம்மாவிடம்தான் கொடுத்துப் பழக்கம். இப்போது மாற்றினால் மனம் வேறுபடக் கூடும். அடுத்து என் அம்மா சமையல் உலகப் பிரசித்தி பெற்றது. அதில் அம்மாவுக்குப் பெருமையும் உண்டு. அதை போற்றித் தான் உன்னைக் கொஞ்சம் மட்டம் தட்டிக்கூடப் பேசித் தான் ஆகவேண்டும். அப்படிப் பேசும்போது உன்மேல் அன்பில்லை என்று நீ நினைத்து விடக்கூடாது. உனக்கு எடுத்த எடுப்பிலேயே பிரியமான உறவுகள் கிடைக்க நான் செய்யும் ஏற்பாடு என்று நல்லவிதமாய் எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்றார். என்னவோ 'அன்றலர்ந்த தாமரை' உதாரணம் சொன்னாயே. அதன் உள்ளே மறைந்திருந்த ரகசியம் அதுதான். நீ கூட அவர்மாதிரியே கெட்டிக்காரத்தனமாக அண்ணியிடம் ஏதோ சொக்கி வைத்திருக்கிறாய் என்றுதான் முதலில் நினைத்தேன்.... ஆனால்... போ, அண்ணா உனக்கு ஒன்றுமே தெரியவில்லையே!'' என்று வருத்தத்துடன் உரைத்தாள் தங்கை.

வாயில்புறம் அரவம் கேட்டது.

வெறும் கையோடு திரும்பி வந்து கொண்டிருந்தாள் ஆனந்தி.

தங்கை முகத்தைப் பார்த்துவிட்டு அவசரமாக மனைவியிடம் திரும்பினான். ''வெயில் அதிகமா, கண்ணு? வியர்த்து விட்டதே'' என்றான் கரிசனமாக.

''வெளியே தூறல் போடுகிறது'' என்றாள் ஆனந்தி அமைதியாக. சற்றே அசடு வழிந்து விட்டு, ''நனைந்து விட்டாயா?... வந்து ஆனந்தி, இன்று உன் உருளைக் கிழங்கு பொடிமாஸ் சூப்பர்.... அப்புறம்...'' என்று மீண்டும் தொடங்கினான் பிரபாகரன்.

''அனாவசியமாய் யாரும் வாயில் வந்ததை உளற வேண்டாம். இன்னைக்குச் செய்திருந்தது, வாழக்காய்ப் புட்டு. உருளைக்கிழங்கு பொடிமாஸ் இல்லை'' என்று மிடுக்காகக் கூறி விட்டு உள்ளே சென்றாள் ஆனந்தி.



அண்ணனைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது மஞ்சுளாவுக்கு. ஆனந்தி பால் தூக்குடன் திரும்பி வந்தாள். ''ஏதோ குழப்பத்தில் தூக்கை எடுத்துச் செல்ல மறந்து திரும்பி வருவது கூட சில சமயம் நல்லதாகி விடுகிறது...'' என்றவள் மஞ்சுளாவின் பக்கம் திரும்பினாள். ''அதென்ன மஞ்சு, பதினைந்து நாட்கள் இருப்பதாக வந்து விட்டு ஐந்தே நாட்களில் கிளம்புகிற வேலை? அப்படியெல்லாம் உன்னை யாரும் அனுப்புவதாக இல்லை. மரியாதையாக இன்னும் பத்து நாள், நன்றாக உண்டு உறங்கி ஃப்ரீயாக இருந்து விட்டு அதென்னது அந்த இறுக்கம் அதெல்லாம் தளர்ந்து , அப்புறம் தான் ஊருக்குப் போகப் போகிறாய். நான் செய்வதுதான் சமையல். ஒரு வார்த்தை குறை சொல்லாமல் எல்லோரும் அதைத்தான் சாப்பிட்டாக வேண்டும்'' என்றவள் சிட்டுக் குருவியாகத் தலையைச் சரித்துக் கணவனை நோக்கினாள். ''உங்களுக்கு வேண்டுமானால் ஒரு கிண்ணம் நெய் தட்டருகே வைத்து விடுகிறேன். வேண்டிய அளவு ஊற்றிக் கொள்ளலாம்'' என்று கண் சிமிட்டவும் எல்லோருக்கும் சிரிப்பு வந்தது. உயிரும் வந்தது.

''சொல்லுமஞ்சு. நாளைக்கு உனக்கு என்னென்ன வேண்டும்?''

கண்களில் நீரும் உதட்டில் புன்னகையுமாகத் தன் அண்ணியின் கையைப் பற்றி மஞ்சுளா சொன்னாள். ''என் அண்ணியின் அன்பு! நாளைக்கு மட்டுமல்ல எப்போதும்!''